# தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்
## தொலைநிலைக்கல்வித் தேர்வுகள்

---

### இணையவழித் தேர்வு வழிகாட்டு நெறிமுறைகள்

தமிழ்ப் பல்கலைக்கழகத் தொலைநிலைக்கல்வி இளங்கல்வியியல் மே 2021 தேர்வுகள் அறிவிக்கப்பட்டுள்ள கால அட்டவணையின்படி 25.06.2021 அன்று தொடங்கி 30.06.2020 வரை நடைபெறவுள்ளன.

1. இளங்கல்வியியல் எழுத்துத் தேர்வுகள் அனைத்தும் 25.06.2021 அன்று முதல் 30.06.2021 வரை இணையவழி நடத்தப்பெறும்.
2. இரண்டாமாண்டு மாணவர்களுக்கான செய்முறைத் தேர்வு நடைமுறைகள் மற்றும் நடைபெறும் நாள் பின்னர் தெரிவிக்கப்படும்.
3. மே 2021 தேர்வுக்கு விண்ணப்பித்துள்ள மாணவர்கள் மட்டும் தேர்வு எழுத அனுமதிக்கப்படுவர். விண்ணப்பிக்காதவர்களின் விடைத்தாள்கள் மதிப்பீடு செய்ய ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
4. தேர்வுகளுக்கான வினாத்தாள்கள் தேர்வு நாளன்று முற்பகல் 9 மணிக்கும், பிற்பகல் 1 மணிக்கும் பல்கலைக்கழக இணையதளத்தில் வெளியிடப்படும். தேர்வு நேரம் முற்பகல் காலை 10 மணி முதல் 1 மணி வரை. பிற்பகல் 2 மணி முதல் 5மணி வரை.
5. முதலாமாண்டு மாணவர்கள் விடைத்தாள்களை வருடியாக்கம் (Scan) செய்து பிற்பகல் 3.00 மணிக்குள் may21bed.firstyear@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அன்றே அனுப்பிவிட வேண்டும்.
6. இரண்டாமாண்டு மாணவர்கள் விடைத்தாள்களை வருடியாக்கம் (Scan) செய்து மாலை 7.00க்குள் may21bed.secondyear@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அன்றே அனுப்பிவிட வேண்டும்.
7. தேர்வு இறுதி நாளன்று தாங்கள் எழுதிய அனைத்து விடைத்தாள்களையும் ஒரே உறையில் வைத்து விரைவுத் தபால் / கூரியர் தபால் மூலம் தொலைநிலைக்கல்வி தேர்வுப் பிரிவுக்கு அனுப்பிவிட வேண்டும்.
8. மாற்றுத் திறனாளி (பார்வைக் குறைபாடுடைய) மாணவர்களுக்குத் தேர்வு நேரத்தில் கூடுதலாக 1 மணி நேரம் அனுமதிக்கப்படுகிறது.